## சுருக்கம்

பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 – கோவிட்–19 – ஜல்லிக்கட்டு 2022 நடத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4) துறை

**அரசாணை (நிலை) எண். 27**

**நாள் : 10.01.2022**
**பிலவ வருடம், மார்கழி 26**
**திருவள்ளுவர் ஆண்டு, 2052**

**படிக்க:–**

1. அரசாணை (நிலை) எண்.795, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4) துறை, நாள் 26.12.2020.
2. அரசாணை (நிலை) எண்.25, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4) துறை, நாள் 07.01.2022.
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்களின் கடித எண்.292/கா.ப.3/2022, நாள் 08.01.2022.

********

**ஆணை:**

கோவிட்–19 நோய்த்தொற்று பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பாக மருத்துவ நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் 10.01.2022 வரை பல்வேறு கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு நீட்டிப்பு செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. தமிழ்நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் நடத்தப்பட்டுவரும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மக்கள் பெருமளவில் மகிழ்ச்சியோடு பங்குபெற்று வருகின்றனர். ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி என்பது காளைகள் மற்றும் மாடுபிடிப்பவர்கள் மட்டுமல்லாமல் பொதுமக்களும் பார்வையாளர்களாக பங்கேற்கும் நிகழ்ச்சியாகும்.

3. திறந்தவெளி விளையாட்டு மைதானங்களில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஜல்லிக்கட்டு போட்டியினை நிலையான

வழிகாட்டு நெறிமுறைகளுடன், தற்போது கொரோனா தொற்று காரணமாக எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியினை கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நடத்த அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

**<u>கோவிட்–19 நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்த பின்பற்றப்பட வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்:–</u>**

1) ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளில் காளைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களும் பெரும் பங்கு வகிப்பதால், ஒரு காளையுடன் சுமார் 5 முதல் 6 நபர்கள் வருவது வழக்கம். இதனை கட்டுப்படுத்தி ஒரு காளையுடன் ஒரு உரிமையாளர் மற்றும் காளையுடன் நன்கு பழக்கமுள்ள ஒரு உதவியாளர், இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT–PCR Test) என்பதற்கான சான்று ஆகியவற்றை வைத்திருந்தால் மட்டுமே அனுமதிக்கபடுவார்கள். காளையின் உரிமையாளர் மற்றும் அவரது உதவியாளருக்கு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கப்படும். மேலும், அடையாள அட்டை இல்லாத நபர்களுக்கு ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்திற்குள் நுழைய அனுமதி இல்லை.

2) காளைகளை பதிவு செய்யும் பொழுது அக்காளையின் உரிமையாளர் மற்றும் உடன்வரும் உதவியாளர் ஆகியோரும் பதிவு செய்தல் வேண்டும். ஜல்லிக்கட்டில் பங்குபெறும் காளைகளின் பதிவு, நிகழ்ச்சி நடைபெறுவதற்கு 3 நாட்களுக்கு முன்பே முடிக்கப்பட வேண்டும்.

3) ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு மற்றும் வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.

4) எருது விடும் நிகழ்ச்சியில் 150 வீரர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.

5) ஜல்லிக்கட்டில் பங்குபெறும் வீரர்களுக்கு, நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 3 நாட்கள் முன்பாக பதிவு செய்து, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும். மேலும் அடையாள அட்டை இல்லாத வீரர்கள் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெறும் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6) ஜல்லிக்கட்டில் பங்குபெறும் வீரர்களுக்கு, இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT–PCR Test) என்பதற்கான சான்று பெறப்பட்டவர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

7) தமிழ்நாடு அரசினால் வெளியிடப்படும் கொரோனா தடுப்பு நடைமுறைகளை பின்பற்றி பார்வையாளர்கள், திறந்த வெளி அரங்கின் அளவிற்கேற்ப (Total capacity) சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில், அதிகபட்சமாக 150 பார்வையாளர்கள் அல்லது அனுமதிக்கப்பட்ட இருக்கை எண்ணிக்கையில் 50 சதவிகிதத்திற்கு மிகாமல் இவற்றில் எது குறைவோ அந்த எண்ணிக்கையில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். பார்வையாளர்கள் இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT–PCR Test) என்பதற்கான சான்று ஆகியவற்றை வைத்திருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

8) ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை மேற்பார்வை செய்யும் அனைத்துத் துறை அலுவலர்களும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும் இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டதற்கான சான்று மற்றும் நிகழ்ச்சி நடைபெறும் தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் கோவிட் தொற்று இல்லை (RT–PCR Test) என்பதற்கான சான்று ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும்.

9) அனைத்து துறை அலுவலர்களும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களும், பார்வையாளர்களும் மற்றும் ஊடகத் துறை சார்ந்தவர்களும் அரசினால் அறிவுறுத்தப்பட்ட நடைமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும்.

10) வெளியூரில் வசிப்பவர்கள் ஜல்லிக்கட்டு நிகழ்வுகளை தொலைக்காட்சி மற்றும் இணைய வழியாக காண அறிவுறுத்தப்படுகிறது.

11) ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகள் நடத்த அரசின் முன் அனுமதி பெற்று பிராணிகள் வதை தடுப்பு (ஜல்லிக்கட்டு நெறிமுறைகள்) விதிகள், 2017, அரசினால் வெளியிடப்பட்டுள்ள ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றுடன் அரசினால் விதிக்கப்படும் கொரோனா தடுப்பு கட்டுப்பாடுகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வெ.இறையன்பு**
**அரசு தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

முதன்மைச் செயலாளர்
மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை 5.

இயக்குநர், பேரிடர் மேலாண்மை, அபாய குறைப்பு முகமை, சென்னை 5.

கூடுதல் தலைமைச் செயலாளர்,

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும்

மீனவர் நலத்துறை, சென்னை 9.

முதன்மைச் செயலாளர்,

மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னை 9.

இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-18.

காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை 4.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9.

சிறப்பு முதுநிலை நேர்முக உதவியாளர்,

வருவாய்மற்றும் பேரிடர் மேலாண்மை

மற்றும் அமைச்சர் அலுவலகம், சென்னை 9

முதுநிலை தனிச் செயலாளர்,

தலைமைச்செயலாளர் அலுவலகம், சென்னை 9.

(இருப்புக் கோப்பு/உதிரி நகல்)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

10/1/22

**பிரிவு அலுவலர்**

10/1/22